LIBRARY
15 OCT 1970
STATE LEGISLATURE, MADRAS

# தமிழ்நாடு சட்டப்பேரவை

செவ்வாய்க்கிழமை, 1969 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Cultivating Tenants in Thanjavur District.*

* 451 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of patta holders who own less than 5 acres of cultivable lands in Thanjavur district ;

(*b*) the number of tenants who are engaged in cultivation in Thanjavur district ;

(*c*) the total acreage of land cultivated by tenants in Thanjavur district as on March 1968 ; and

(*d*) the number of tenants who own patta lands in Thanjavur district ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

(*a*) 607,374.

(*b*) 160,672.

(*c*) 301,618.

(*d*) 64,089.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் கணக்கு ஸ்டாண்டர்ட் எக்கரா அல்லது சாதாரண எக்கரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஸ்டாண்டர்ட் எக்கர் என்றுதான் கருதுகிறேன். இப்போது விவரம் இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தஞ்சாவூர் மாவட்டத்தில் இம் மாதிரி குத்தகை அடிப்படையில் பயிரிடக்கூடிய விவசாயிகள் இந்த மாவட்டத்திலுள்ள தர்மபுரம் ஆதீன மடத்திற்குச் சொந்தமான எவ்வளவு எக்கர் இடங்களில் குத்தகை சாகுபடிதாரர்கள் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

**திரு. பி. வேலுச்சாமி :** தலைவர் அவர்களே, ஐந்து எக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ளவர்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது தஞ்சையைப் பற்றிய கேள்வி. தமிழ்நாட்டைப் பற்றியது அல்ல.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் மொத்தம் பயிரிடக்கூடிய நிலங்களை வைத்திருப்பவர்களில் ஐந்து எக்கருக்கு மேல் வைத்திருக்கும் பட்டாதாரர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக்கேள்வி போட வேண்டும்.

**காஞ்சிபுரத்தைத் தனி மாவட்டமாக்கல்.**

*452 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
**திரு. கே. விநாயகம் :**
**திரு. கரு. சீமைச்சாமி :** } மாண்புமிகு நிதி அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில வட்டங்களையும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சில வட்டங்களையும் ஒன்று சேர்த்து காஞ்சிபுரம் மாவட்டம் ஆக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** நமது மாநிலத்தில் இப்போது இருக்கிற மாவட்டங்கள் ஒன்று பெரிதாகவும் ஒன்று சிறியதாகவும் இருக்கிறது என்ற காரணத்தினாலும், செங்கல்பட்டு மாவட்டம் மிகச் சிறியதாக இருக்கிற காரணத்தினாலும், செய்யாறு, அரக்கோணம், தாலுக்காக்களை எடுத்து செங்கல்பட்டு மாவட்டத்தோடு இணைத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்ற விஷயத்தை அரசு யோசித்ததா ? இதைப்பற்றி பொது மக்களிடமிருந்தோ, அல்லது டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கமிட்டியிடமிருந்தோ சிபார்சு வந்ததா ? அதைப் பரிசீலித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுமாதிரியான யோசனை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனை மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு காஞ்சிபுரம் நகரசபை வரவேற்பு அளித்தபோது சொல்லப்பட்டது. இப்பொழுதிருக்கிற காஞ்சிபுரம், திருத்தணி, உத்திரமேரூர் தாலுக்காவோடு அரக்கோணம் தாலுக்காவும் வந்தவாசி தாலுக்காவும், செய்யாறு தாலுக்காவும், சேர்த்து ஒரு மாவட்டமாக அமைக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டது. அந்த யோசனைக்கு பல இடங்களிலிருந்து எதிர்ப்பு வந்தது. செங்கல்பட்டு வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், திருவள்ளூர் வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், வட ஆர்க்காடு வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. செங்கல்பட்டு நகரமன்றமும், மதுராந்தகம் பஞ்சாயத்து யூனியன் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் ஏற்கனவே இருக்கிற எங்களுடைய மாவட்டம் இன்னும் குறைக்கப்பட்டு விடுமே என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த முயற்சியை பரிசீலனை செய்வதுபற்றி அரசாங்கம் ஒத்திவைத்திருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் திருத்தணி தாலுக்கா நியாயமாக இருக்க வேண்டும். ஆனால் ஏற்கெனவே இருந்த முதல் அமைச்சர் சொந்த காரணத்திற்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் அதை சேர்த்திருக்கிறார்கள். அது கிழக்கு பாகிஸ்தான் போலவும் மேற்கு பாகிஸ்தான் போலவும் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? எனவே அதை மாற்றி திருத்தணி தாலுக்காவை வட ஆர்க்காடு மாவட்டத்தில் சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா ?